www.padippakam.com


# புதிய கண்ணோட்டம்

## The NEW PERSPECTIVE

வெளியீடு 10 — 1989 பங்குனி 01 — ரூபா 2


### சமாதானம், ஜனநாயகம், தேசப்புனர் நிர்மாணத்திற்கு

### வட-கிழக்கு மாகாண அரசாங்கத்தைப் பலப்படுத்திச் செயற்படுத்த

# மக்கள் தீர்ப்பு

# சுயேட்சைக்குழு பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுக்குமா?

குறுகிய காலத்திற்குள் மூன்று வகைப்பட்ட தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன.

வடக்கு — கிழக்கைப் பொறுத்த வரையில் மக்கள் அமைதி வாழ்விற்கு அவாவி நிற்பதையும், ஜனநாயக விருப்பையும் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை மாகாண அரசாங்கத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் தெரிவாக்கி, அராஜகச் சூழலிருந்து விடுபட ஆவன செய்திருக்கிறார்கள்.

தமிழ்மக்களின் விருப்பத்தை தத்தமக்கு விரும்பியவாறெல்லாம் திரித்துக் கற்பனை பண்ணிக்கொண்டு, தமிழ் மக்களின் காவலர்கள் தாமே என்று சண்டித்தனம் செய்துகொண்டிருப்பவர்கள் எல்லாம் இனி, மாறிவிட்ட காலத்தின் தேவைக்கு உகந்தவாறு செயற்பட முன்வர வேண்டும். இல்லையெனில், மக்களுக்குத் தொல்லையளிப்பவர்களாகவே இவர்கள் மாறி சமுதாய நோயாளர்களாகிவிடுவர் என்பதை மக்கள் நலன் கருதி முன்கூட்டியே எச்சரிப்பது நம் கடமை.

கடைசியாக நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வடக்கு—கிழக்கில் சுயேட்சைக் குழுவிலிருந்தும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்தும் பெரும்பான்மையான உறுப்பினர்கள்பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பமையானது, ஆயுதக்கொடுரங்களற்ற அமைதிச் சூழ்நிலையினையும், சமூக வளர்ச்சிக்கான அடிப்படைக் கூறுகள் நிலைநாட்டப்படுதலும் இன்றைய தேவையாக மக்கள் கணித்திருக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் இப்பொதுத் தேர்தலில் வடக்கில் ஐந்து வேட்பாளர்களையும்,கிழக்கில் ஆறு வேட்பாளர்களையும் நிறுத்தியிருந்தது.

வடக்கில் ஐந்து வேட்பாளர்களுமே வெற்றி பெற்றிருப்பமையானது மக்களின் நம்பிக்கை பொய்த்துப் போகாதவாறு பொறுப்போடு பணியாற்ற எங்களுக்கு உந்துதலாய் அமையும்.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் ஒரே ஒரு தமிழ்ப் பிரதிநிதி மட்டுமே வெற்றி கொள்ள முடியும் என்பதைக் கணக்கில்கொண்டு பார்த்தால் ஈ.பி.ஆர்.எல்.எவ் க்கு நாலுக்கு இரண்டு என்ற வகையில் வெற்றி கிடைத்துள்ளது.



யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர்களாக க.பிரேமச்சந்திரன், க.யோசங்கரி, க.நவரத்தினம் ஆகியோரும், வன்னி மாவட்ட உறுப்பினர்களாக அந்தனி இமானுவேல், இராஜ குகனேஸ்வரன் ஆகியோரும், மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களாக சாம் தம்பிமுத்து, பிரின்ஸ் காசிநாதர் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

மற்றும் இப்பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் போட்டியிட்டவர்களில் சுயேட்சைக்குழு-1 இலிருந்து 12 உறுப்பினர்களும், ரெலோவிலிருந்து 2 உறுப்னர்களும். சுயேட்சைக்குழு 2 இலிருந்து ஒரு உறுப்பினரும் தெரிவாகியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நிறுத்திய 16 வேட்பாளர்களில் எவரையும் மக்கள் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு.அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளார்,

ஈரோஸ் இயக்கத்தினர், தேர்தல் முடிந்து மறுகணமே எல்லோரும் தங்களை அடித்து நொறுக்குவதாக அலறி அனுதாபத்தைப் பெறப் பகிரதப் பிரயத்தனங்கள் செய்துள்ளனர். தேர்தல் அசம்பாவிதங்களில் பொதுமக்கள் சிலர் பலியாகியுள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களும் ஆங்காங்கே பாதிக்கப்பட்டுள்ளனர், ஈரோஸ் உறுப்பினர்கள் எந்த ஆபத்துக்களிலிலும் மாட்டிக் கொள்ளவில்லை—தேர்தல் நேர இரண்டொரு சம்பவங்களைத் தவிர.

( - தொடர்ச்சி 8ம் பக்கம்......)

## இனிய தமிழ் மக்களே!... உள்ளே

### எமதினிய தமிழ் மக்களே!

*1988ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ந் திகதி வடக்கு மாகாணத்தில்—*

*எம்மை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவதற்கு யாரும் துணிந்து முன்வரவில்லை.*

*அப்போது புலிகளின் பிடியிலிருந்து மீறுவதற்கு ஈரோஸ்சாரார்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை,*

*கார்த்திகை 19 ந் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் 80 சதவீதமானோர் வாக்களித்தனர்.*

*அப்போது—*

*அதை பலர் நம்பவில்லை.*

*கிழக்கு மாகாண மக்களையும் ஈ பி ஆர் எல் எவ் பையும் கொச்சைப் படுத்தியெல்லாம் பிரச்சாரங்கள் நடந்தன.*

*மார்கழி மாதம் 19 ந் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில்—*

*யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் 12.5 சதவீதமானோர் வாக்கத்ளிதார்கள்.*

*சே...... இவ்வளவுதானா! என்றார்கள்.*

*இந்த ஆண்டு மாசி 15 ல் நடைபெற்ற பாராளுமன்ற பொது த்தேர்தலில்—*

*யாழ்ப்பாண மக்சள் 48 சதவீதமானோர் வாக்களித்திருக்கிறார்கள்.*

*உடுப்பிட்டி போன்ற சில பகுதிகளைக் கழித்து விட்டுப் பார்த்தால் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் வாக்களித்திருக்கிறார்கள்.*

*கிழக்கு மாகாண மக்கள்—*

*மாகாணசபைத் தேர்தலில் எவ்வளவு சதவீதம் வாக்களித்தார்களோ அதே அளவுக்கு பொதுத் தேர்தலிலும் வாக்களித்திருக்கிறார்கள்.*

*இந்தக் கணிப்பீடு ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்தின் ஒரு குறியீடு அல்லவா......*

*அதுமட்டுமல்ல, இன்னுமொரு மிகப் பிரதானமான விடயம்—*

*வடக்கு மாகாணத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஐந்து வேட்பாளர்களைத்தான் போட்டியில் நிறுத்தியது.*

*அந்த ஐந்து பேருமே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.*

### அன்பிற்கினிய மக்களே!

*இந்த சந்தர்ப்பத்தில்—*

*எம்து தேசத்தில் சமாதானக் காற்று வீச வேண்டும்,*

*ஜனநாயகச் சூழல் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தன்னலமற்றரீதியில், எதற்கும் அஞ்சாது பணியாற்றி உயிர் நீத்த தோழர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவோம்.*

*நல்ல எதிர்காலத்திற்கான நம்பிக்கையொளி இப்போது மிக நன்றாகவே தெரிகிறது.*

*இதுவரையான உழைப்பும் தியாகங்களும் வீண்போகவில்லை — விரைவாகவே பலன் தந்திருக்கின்றன.*

*தளரா மனஉறுதியுடன் மேலும் மேலும் பல மடங்கு வேகமாக வீறு நடை போடுவோம்.*

படிப்பகம்

# இனிய தமிழ் மக்களே!...

**அன்பிற்கினிய தமிழ்மக்களே!**

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புதிய கண்ணோட்டத்தினூடாக உங்களுடன் பேசுகிறோம்.

ஆனால், இந்த இடைவெளிக் காலகட்டத்தில் எத்தனையோ பல நல்ல விடயங்களும், சில துன்பகரமான நிகழ்ச்சிகளும் நடந்து முடிந்துவிட்டன.

மொத்தத்தில் -

சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நோக்கி நிலைமைகள் மிக விரைவாக் முன்னேறியிருக்கின்றன என்பதனால் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைவோம் -

மேலும் முன்னேற்றங்கள் தொடர விடாப்பிடியாக உழைப்போம்.

எமது தேச மக்களுக்கு சமாதானச் சூழல் வரவே வராது;

இரத்த ஆறு ஓடுவதை நிறுத்தவே முடியாது;

ஜனநாயகக் காற்று எமது தேசத்தின் பக்கம் அடிக்கவே மாட்டாது என்று பலரும் நினைத்துக் கொண்டு வாளாதிருந்த வேளையில்—

அவ்வாறான பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டு எல்லா வகைகளிலும் தோல்வி மனப்பான்மையையே வளர்த்துக் கொண்டு இருந்தவர்கள் மத்தியில்—

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒன்றுதான மக்கள் மீதும், வரலாற்றின் மீதும் அசையாத நம்பிக்கை வைத்து,

சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் எப்படியாவது அடைந்தே தீருவது என்ற மனஉறுதியோடு உழைத்து வந்தது;

போராடி வந்தது;

தியாகங்களைப் புரிந்து வந்திருக்கிறது;

முன்னேற்றங்களை நடைமுறையில் நடத்திக் காட்டியிருக்கின்றது.

எமது தேசத்தின் நிலைமையை மாற்றியமைப்பதற்கு நாம் எடுத்துக்கொண்ட சிரமங்கள் இழப்புகள் ஒன்றும் வீண்போய் விடவில்லை என்பதை உணர்த்தும் இன்றைய நிலைமையே உண்மையில் எங்களைப் பெருமைப்பட வைக்கிறது.

இதைப் பாதுகாத்துக் கொண்டு மேலும் நிரந்தர ஜனநாயகம், நீடித்த சமாதானம் என்னும் நிலை வரை வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டிய கடமையும் உண்டு என்பதைத பொறுப்புணர்ச்சியோடு புரிந்து கொள்கிறோம்.

**அன்பார்ந்த மக்களே!**

கடந்த ஒரு வருட காலத்தை மீண்டும் மீட்டெடுத்து அசைபோட்டுப் பாருங்கள்.

மாகாணசபைத் தேர்தலுககுப் பின்னர் வெளிவருகின்ற புதிய கண்ணோட்டமாக இது இருப்பதனால்—

உங்களோடு நிறைய விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

இருப்பினும் சுருக்கமாக விடயங்களை நோக்குவோம்:

தமிழ் மக்களின் பிரதேசத்தில் ஓர் அரசு என்பது உருவாக,

சிவில் நிர்வாகங்களை ஒழுங்குபடுத்த,

புனரமைப்பு புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு தேர்தல் மூலம் ஓர் அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் அன்று வலியுறுத்தினோம்;

அந்தக் கோரிக்கையை முன்வைத்தோம்.

தமிழ்ப் பகுதியில் தேர்தல் ஒன்று நடைபெற முடியாது என்று எடுத்த வாக்கில் தலையாட்டினார்கள் சிலர்;

தேர்தல் ஒன்று நடைபெற்றால் இரத்தஆறு ஓடும் என்றார்கள் சிலர்;

முழுமையான அமைதி ஏற்பட்டதன் பின்னரே தேர்தல் சாத்தியம் என்றார்கள் சிலர்;

தேர்தல் என்ற ஒன்று இல்லாமல் நியமனம் முறையில் இடைக்கால நிர்வாசம் ஒன்றை மூன்று ஆண்டுகளுக்கு புலிகளின் கையில் கொடுக்க வேண்டும் என்று குரல் எழுப்பினார்கள் சிலர்;

ஏனைய இயக்கங்களின்,

கட்சிகளின்,

குழுக்களின் உறுப்பினர்களை புலிகள் கொலை செய்து குவித்து வந்த வேளையிலும்—

அதற்காக யாரும் குரல் கொடுக்காத சூழ்நிலை—

இவ்வாறான கருத்துக்கள் சூழ்நிலைகளின் மத்தியிலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒன்றுதான் தனது உழைப்பின் மீதும்,

## கொலைகளைக் கண்டிக்கிறோம்

அமைதி, சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றின்மீது பெருவிருப்புக் கொண்ட தமிழ்பேசும் மக்கள் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பெருமளவில் வாக்களித்துள்ளனர். தேர்தலை நடைபெறாமல் தடுக்கும்பொருட்டு மக்களை அச்சுறுத்தியும், வன்முறைகளைக் கையாண்டும் அபேட்சகர்களையும் பொதுமக்களையும் கொலை செய்து பயமுறுத்திய விடுதலைப் புலிகளுக்கு இத்தேர்தல்மூலம் மக்கள் சரியான பாடத்தைப் புகட்டியுள்ளனர்.

தேசிய ரீதியாகவும், சர்வதேசிய ரீதியாகவும் இக்கும்பலின் 'அரசியல் வேஷம்' இப்பொதுத் தேர்தலின்மூலம் துகிலுரியப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டுள்ளது. இதனால் விரக்தியடைந்த இக்கும்பல் தனது அரசியல் வங்குரோட்டுத் தனத்தை மூடி மறைக்க தேர்தலில் வாக்களித்த அப்பாவிப் பொதுமக்களை மீண்டும் கொன்று குவிக்கத் தலைப்பட்டுள்ளனர். இவ்வாறு இரண்டொரு தினங்களில் பின்வருவோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1. எம். அமிர்தலிங்கம், ஈழமுரசு ஆசிரியர், யாழ்ப்பாணம்.
2. நல்லதங்கச்சி, (பெண்) பருத்தித்துறை.
3, ச. காசிநாதன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
4, தேவநாயகம், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
5. தியாகராசா, யாழ்ப்பாணம்.

இக்கொடூரமான அனைத்துக் கொலைகளையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய கொலைகளின்மூலம் ஒருபோதும் மக்களின் எழுச்சிகளை தடுத்து நிறுத்த முடியாதென்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மக்கள்தான் வரலாற்றை உருவாக்குபவர்கள் துப்பாக்கிகளல்ல என்பதைப் புரிந்துகொண்டு, இச்சமூக விரோதக் கும்பலுக்கு எதிராகப் போராட முன்வருமாறு அனைத்து ஜனநாயக, முற்போக்குச் சக்திகளுக்கும், மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
21 - 2 - 1989


**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

வட — கிழக்கு மாகாண அரசு அமைக்கப்பட்ட பின் உருவாகிவரும் அமைதிச் சூழ்நிலையினாலும் மாகாண அரசாங்கத்திற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவினாலும் விரக்தியடைந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் —

தமது கோரப்பற்களை மீண்டும் பொது மக்கள் மீது பதிக்கத் தொடங்கி விட்டார்கள்.

04.02.89 அன்று அச்சுவேலியில் வாகனம் ஒன்றில் திருமணம் ஒன்றுக்கு சென்றுவிட்டுத் திரும்பி வந்த பொது மக்கள் 6 பேரை கண்ணி வெடி வைத்து கொன்றுள்ளார்கள். இக்கொலைகளை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் புலிகளினால் கொலை செய்யப்பட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் சமாதானத்தையும்; ஜனநாயகத்தையும் விரும்பும் மக்கள் இப்படியான அராஜகக் கும்பல்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் இலங்கையில் ஓர் அரசியல் ஸ்திரமின்மையைத் தோற்றுவிக்க முயலும் இக்கொலைகாரச் சக்திகளுக்கு எதிராக அனைத்து ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் ஒன்றிணைந்துபோராட முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.





www.padippakam.com



ஆற்றலின் மீதும், நியாயங்களின் மீதும் நம்பிக்கை வைத்துப் பணி யாற்றியது;

வரலாற்றை மக்கள் மாற்றியமைப்பார்கள் என்ற உறுதியோடு மக்களுக்கு நல்ல எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டியது;

சிறீலங்கா அரசாங்கமும் புலிகளும் எல்லாவகையான தடைகளைப் போட்ட வேளையிலும்—

சிறிது ஒத்துழைப்பைத்தானும் தருவதற்கு மறுத்த வேளையிலும்—

மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டியது;

தேர்தல் மூலம் ஓர் அரசு உருவாக வழிவகுத்துக் கொடுத்தது.

இந்திய, இலங்கை ஆட்சியாளர்களிடம் நியமனம் மூலமான இடைக்கால நிர்வாசப் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கண்முன்னாலேயே மக்களின் தீர்ப்பு மூலமான ஓர் அரசை உருவாக்கிக் காட்டியிருக்கிறோம்.

சாதித்ததைச் சொல்லி எக்காளமிடுகின்ற அகங்கார நோக்கில் நாம் இதைச் சொல்லவில்லை.

வாய்மூடி மௌனிகளாய் பயச் சூழ்நிலையிலேயே வாழ்ந்திருந்த எமது மக்களுக்கு—

இந்தக் கொலைக் களத்தின் அவலங்களிலிருந்து விமோசனமே இல்லையா என்று ஏங்கியிருந்த மக்களுக்கு—

விடிவிற்கான பாதையைத் திறந்துவிட்டிருக்கிறோம் என்னும் நியாயபூர்வமான பெருமிதத்துடன் பேசுகிறோம்.

## இனிய மக்களே!

மாகாண அரசாங்கத்தை உருவாக்கியது மட்டுமல்ல; அதைத் தொடர்ந்து— ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான நிலைமையையும் ஏற்படுத்துவதற்கு உழைத்தோம்.

பாராளுமன்றத் தேர்தல் ஒன்று ஏறத்தாழ எல்லாக் கட்சிகளும் பங்குபற்றக்கூடிய நிலைமையையும், நம்பிக்கையோடு பங்குபற்றும் சூழலையும் ஏற்ப்டுத்தினோம்.

புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, தமக்கு இனிமேல் அரசியல் வாழ்வு இல்லை என்று நினைத்து கையாலாகாதவர்களாக செயலற்று இருந்தவர்களை—

மக்களின் முன்னால் அரசியல் மேடைக்குக் கொண்டு வந்து நிறுத்திக் காட்டியிருக்கிறோம்.

நிரந்தர அமைதி,

உண்மையான ஒற்றுமை,

மக்களின் விருப்பு என்று வெறுமனே வாய்ச்சொல் வீச்சுகளை மட்டும் கூறிக்கொண்டு எரிந்துகொண்டிருக்கும் குழப்ப நிலைமைக்கு மேலும் எண்ணெய் ஊற்றும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்ல நாங்கள்;

அல்லது—

நாங்கள் அப்பாவித்தனமான நல்லபிள்ளை வேஷம் போட்டுக் கொண்டு, மறைமுகமாக அயோக்கியத்தனங்கள் புரிந்துகொண்டே அடுத்தவர்களின் உழைப்பை பலாபலன்களைஅறுவடை செய்யும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுமல்ல.

எங்களைப் பெறுத்தவரையில் எல்லாம் வெளிப்படை;

நேருக்கு நேராகவே கூறுவதே எமது பழக்கம்.

( - தொடர்ச்சி 6ம் பக்கம்......)

# சோவியத் நாட்டு மக்களது கதைகள்

அல்தாய் மலைகளில் கூறப்படும் நாட்டுக் கதை

## கொலை வெறிப் பூதத்தின் முடிவு

முன்பொரு காலத்தில் அல்தாய் மலைகளில் தன் விஷ்டப்படி மனிதர்களைக் கொலை செய்து திரியும் அல்மீஸ் என்றொரு மன்னுணிப் பூதம் இருந்தது.

நீளமான தனது கரிய மீசைகளை அது தன் தோள்களில் போட்டுக்கொண்டு அலைந்தது. முழங்காலைத் தொடும்படி அதன் தாடி அவ்வளவு நீளமாய் வளர்ந்து தொங்கிற்று. அதன் விழிகள் இரண்டும் இரத்தமாய்ச் செக்கச் சிவந்திருந்தன. பற்கள் பெரிதாகவும் கூர்மையாகவும் இருந்தன. அதன் விரல்களில் கூரிய நகங்களும் இருந்தன.

இரத்த வெறி கொண்ட இந்தக் கொடும் பூதம் தன்னை எதிர்ப்பதற்கு யாருமிருக்கக் கூடாதென்று மனிதர்கள் எல்லோரையும் கொன்று தின்று வந்தது. காட்டிலே வேட்டையாட வருவோரையும் கிராமங்களுக்குள் சென்று அப்பாவி மனிதரையும் இளைஞர்களையும் பெண்களையும் அடித்துத் தின்று வந்தது. கிழவர்களையும் சிறு குழந்தைகளையும் கூட அது விடுவதில்லை, யாராய் இருந்தாலும் தன்னால் அவர்களைப் பாய்ந்து பிடித்துத் தின்றுவிட முடியும் என்று அது நிரூபித்து வந்தது.

அந்தக் கிராமங்களில் ஒன்றில் பரல்தோய்-மெர்கேன் என்றொரு வேடன் வசித்து வந்தான். அவன் மனோதிடமும் சாமர்த்தியமும் வாய்ந்தவன். எல்லாக் காடுகளிலும் மலைகளிலும் சுற்றியலைந்தவன். விலங்குகளையும் தீங்குகளையும் எதிர்த்து வெல்லக் கூடிய உறுதிமிக்கவனாயிருந்தான். ஏனெனில் அவன் கூர்மையான கண்களும் நுண்ணறிவும் வலுவான கரங்களும் கொண்டவன்.

ஒருநாள் பூதம் மலைகளிலிருந்து இறங்கி பரலதோய்-மெர்ளேன் கிராமத்துக்கு வந்துவிட்டது. பீதியுற்ற கிராமவாசிகள் எங்கே ஒளிவதென்று புரியாமல் கதிகலங்கிப்போய் அங்கும் இங்கும் ஓடினர். அப்பொழுது குழந்தைகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு பூதம் மலைகளுக்குத் திரும்பிற்று.

பூதம் கிராமத்தில் இருந்தவரை கிராமவாசிகள் வாய்விட்டுப் பேசத்துணியாது குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். மலைகளுக்கு அது திரும்பிச் சென்ற பிறகு எல்லோரும் வாய்விட்டுப் பேசவும் அழுது புலம்பவும் முற்பட்டனர்.

''இந்தக் கொடிய மன்னுணிப் பூதம் அடுத்தபடி யாருடைய குழந்தையைப் பிடித்துச் செல்லப் போகிறதோ?'' என்று தாய்மார்கள் கதறியழுதார்கள்... குழந்தைகள் கண்களைக் கசக்கிக் கொண்டு விக்கிக் கொண்டு நின்றார்கள்... ஆடவர்கள் கலங்கிப்போய் மௌனமாய் இருந்தார்கள்.

பிறகு பரல்தோய்-மெர்கேன் எல்லோர் முன்னாலும் சென்று— ''கண்ணீர் வடித்தோ, ஓடிஒளிந்து கொண்டோ பயனில்லை, அல்மீசை உடனே கொன்றாக வேண்டும், அப்பொழுதுதான் நாம் அச்சமின்றி வாழ முடியும்'' என்று சொன்னான்.

''அல்மீசைக் கொல்வதற்கோ, அதன் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவதற்கோ வழி இல்லையே!'' என்று ஆடவர்கள் எல்லோரும் பதிலளித்தனர். ''விண்ணிலே உயர்ந்து பறப்பதற்கு நாம் பறவைகளல்ல, நீருக்கடியில் ஒளிந்துகொள்வதற்கு நாம் மீன்களுமல்ல. கேடுகெட்ட இந்தக் கொடிய பூதம் விரும்பிக் கேட்பதைக் கொடுத்துவிட்டு, அதன் கூர் நகங்களுக்கும் பற்களுக்கும் பலியாகி மடிவதைத் தவிர தமக்கு வழி ஏதுமில்லை'' என்று புலம்பினர்.

பரல்தோய்-மெர்கேன் இதைக் கேட்டுக் கொடுந் துயருற்றான். தன் மகனான சிறுவனைப் பார்த்துத் தன்னுள் கூறிக்கொண்டான்: ''என் மகன் அல்மீசின் கைகளில் அகப்பட்டு அதன் கூர்மையான பற்களால் கிழிக்கப்படுவதற்கா இவ்வுலகில் பிறந்தான்? இங்குள்ள ஏனைய குழந்தைகள் எல்லோரும் இப்படிப் பலியாவதற்குத்தானா பிறந்திருக்கிறார்கள்? இல்லை, அல்மீசை எப்படியேனும் கொன்று, தாய்மார்களின் துயரத்துக்கு முடிவு கட்டியாக வேண்டும்!''

எப்படிச் செய்வது இதை?

அல்மீசைப் போருக்கழைத்து, அதை எதிர்த்துப் போராடுவது முடியாத காரியம். தன்னை மட்டுமல்ல, எல்லோரையும் ஒருசேர அழித்துவிடும்படியான பலம் கொண்ட பூதம் அது. அதோடு, கிராம மக்கள் அதை எதிர்த்துப் போராட ஒருநாளும் துணியமாட்டார்கள்.

அல்மீஸ் அப்படி அவர்களை அச்சுறுத்திப் பணிய வைத்திருந்தது; எல்லோரையும் கோழைகளாய்ப் பதுங்கச் செய்துவந்தது.

அல்மீசிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவது எப்படியென்று பரல்தோய்-மெர்கேன் ஓயாது ஒழியாது சிந்தனை செய்து வந்தான். பலநாட்களாய்ச் சிந்தனை புரிந்தான். முடிவில் என்ன செய்வதென்று தெரிந்து கொண்டு விட்டான்.

ஆனால் யாரிடமும் அவன் தனது திட்டத்தைச் சொல்லவில்லை.

( - தொடர்ச்சி 6ம் பக்கம்......)


**"நீ தைரியசாலிதானா?" என்று பரல்தோய்-மெர்கேன் கேட்டான்.**
**"தைரியசாலிதான்" என்று சிறுவன் பதிலளித்தான்.**
**"மக்கள்பால் நீ பாசமும் பரிவும் கொண்டிருக்கிறாயா?"**
**"கொண்டிருக்கிறேன்!"**
**"அப்படியானால் என்னுடன் புறப்பட்டு வா! நாம் செல்ல வேண்டிய இடம் தொலைவில் இருக்கிறது, நமது பணி பயங்கரமானது. ஆனால் நாம் போய் இதைச் செய்தே ஆகவேண்டும்.'**

அல்மீஸ் பெரும் பலம் படைத்ததாகவும் தந்திரம் வாய்ந்ததாகவும் இருந்ததால் யாரும் அதை எதிர்த்துப் போர் புரியத் துணியவில்லை. அல்மீஸ் வருவது தெரிந்ததும் எல்லோரும் நாற்றிசையிலும் ஓடிஒளிந்து கொள்ளவே முயன்றனர். வேறு என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

''நம்மைக் காட்டிலும் அல்மீஸ் பலமுடைத்தது, சூழ்ச்சியும் தந்திரமும் வாய்ந்தது, யாராலும் அதைத் தோற்கடிக்கவும் முடியாது, ஏமாற்றித் தப்பிக் கொள்ளவும் முடியாது'' என்று அவர்கள் கூறினர். ''அதன் கொடுமைகளைச் சகித்துக்கொண்டு வாழ்வதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை'' என்றனர்.

ஆகவே அவர்கள் சகித்துக்கொண்டு சும்மாயிருந்தனர். இது அல்மீசுக்கு மேலும் மேலும் உற்சாகத்துடன் தன்னிஷ்டப்படியெல்லாம் கொலைகள் புரிய ஏதுவாக இருந்தது.

SUN Thursday, February 23, 1989. 3




நன்றி : SUN

படிப்பகம்



தோழர் ஐயா

எமது மண்ணில் நீங்கள் நிலைநாட்ட விரும்பிய. சமாதானம்,ஜனநாயகம் எமது மக்களின் வளமான எதிர்காலம் என்பவற்றுக்கான அடித்தளத்தை மிகுந்த பிரயாசையுடன் கட்டியெழுப்பியிருக்கிறோம்.

இவற்றைப் பாதுகாத்துக் கொண்டு எமது குறிக்கோள்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் விடாப்பிடியாக உழைப்போம் என்பதில் உறுதியாக உள்ளோம்.

தொடர்ச்சியான உயிரிழப்புகளையும், விதரணையற்ற தூற்றுதல்களையும் நாமே தாங்கிக் கொண்டு அனைத்துவகை சக்திகளையும் ஒருங்கு திரட்டி உறுதிகுலையாது முன்னேறுகிறோம்.

உங்கள் தியாகங்களைக் கௌரவப்படுத்தும் புதியசமுதாய நிர்மாணத்திற்காகப் பற்றுறுதியுடன் உழைப்போம்.




தோழர் குமார்



தோழர் சிவா



தோழர் சின்னவன்



தோழர் கபூர்



தோழர் திரு



தோழர் ரட்ணம்



தோழர் வேலு




தோழர் அன்பரசன்



தோழர் ராஜன்



தோழர் பாலா



ஒரு பெரிய யுத்த காலத்தில் நாங்கள்
அனைவரும் நிராயுதபாணிகளாகப் போராடினோம்
நடுங்காத கைகளே மகத்தான ஆயுதங்கள்
என்பதை நிரூபணம் செய்தோம்.
ரத்தங்களை பாயாமலே வெற்றிப்பயிர்
விளைந்துவிட்டால், அறுவடை வேலைகள்
கண்ணீர் மழைச்சாரலில்தான் நடைபெற
வேண்டுமோ?
கல்லும் கரைந்துருகும் சோக வேதனையில்
எங்களை நிறுத்திவிட்டு நீங்கள்
ஏன் சிலையாகி விட்டீர்கள்?
உமது அலைகள் பூமியை ஆளும்போது
நீங்கள் ஏன் பாதாளத்திற்குள் உறங்குகிறீர்கள்?
புத்தகங்கள் நூலகத்திற்குப் போவதுபோல்
கல்லறைக்குப் போன
தத்துவத் தோழர்கள் நீங்கள்,
அழத் தெரிந்தவர்கள்தான்
உங்களை ரசிக்க முடியுமென்பதை
அழியாத உண்மையாக்கி விட்டீர்களே
எத்தனை, எத்தனை தாலாட்டுப் பாடல்கள்
பாதியிலேயே வழிமாறி
மாயான பூமிக்குச் சென்றிருக்கின்றன.
ஆனால், சாவின் வயிற்றில் மறுபிறவி எடுத்து
மனித மனங்களையெல்லாம்
... ... கொண்டவர்கள் நீங்கள்தான்.
... ... மீது ...



தோழர் அருள்



தோழர் பீற்றர்



தோழர் றேகன்




தோழர் கணேஷ்




தோழர் அமீன்



தோழர் ரஞ்சித்





# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி


தோழர் பெஞ்சமின்


தோழர் அப்துல்லா


தோழர் தைரி


தோழர் ஷோபா

[illegible]
தலைமைத்தனம்
ஏற்றுக் கொள்கிறபோது
ஆனந்தக் கண்ணீர் சிந்தப்படுகிறது.
உங்கள் காலம்
''கண்ணீர்த் துளிகளின் பொற்காலம்'' அல்லவா?
நீங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொண்டபிறகு
இனி நாங்கள் வெற்றி கொள்ள
என்ன இருக்கிறது?
நீங்கள் வசந்தகாலம்.
நாங்கள் தோட்டக்காரர்கள்
தம்மை எதிர்த்தவர்கள் விசித்திரமானவர்கள்.
அவர்கள்
தம் சுவடுகளிலேயே நமது
பாதங்களை வெட்டிப் புதைக்க
முயன்றவர்கள்.
தோழர்களே! அவர்கள் உங்கள்
சுவாசக் காற்றைக்கூட வேட்டையாடியவர்கள்.
அவர்கள் தோற்றுப் போனவர்கள்!
எங்கள் ஆனந்தக் கண்ணீரிலாவது
அவர்களது பாவமூட்டைகள் புனிதமாகட்டும்.

நா.கா மராசனின் ''சாகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்'' நூலிலிருந்து.


தோழர் கொட்வின்


தோழர் சாரங்கன்


தோழர் நவீனன்


தோழர் தாஸ்


தோழர் சின்னபாபு


தோழர் ராஜன்


தோழர் ஜெயந்தன்


தோழர் இந்திரன்


தோழர் கந்தசாமி


தோழர் விக்கி


தோழர் மதி


தோழர் டயஸ்


தோழர் இளங்கோ


தோழர் இதயம்


தோழர் முத்துக்குமார்


தோழர் பிரதீப்


தோழர் குமார்


தோழர் றோகன்

www.padippakam.com



(...... 3 ம் பக்கத் தொடர்ச்சி)

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

தமிழ் மக்களுக்கு என்று ஓர் அரசு இல்லை,

அரசியல் ரீதியாக பிரதிநிதிகள் இல்லை,

கொலைகார கூட்டமும் கொள்ளைக்காரக் கூட்டங்களும் தாம் தாமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில்,

அந்த நிலைமையை மாற்ற முடியாது என்றிருந்த நிலைமையை அடிப்படையில் இப்போது மாற்றிக் காட்டியிருக்கின்றோம்.

மக்களே! இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை மட்டும் தெளிவாகவும் ஆழமாகவும் சிந்திக்கும்படி பணிவாக கேட்கிறோம்.

இன்றைய இந்த நிலைமையை—

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் சும்மா கைகட்டி வாய்பொத்தி நல்ல பிள்ளை வேஷம் போட்டுக் கொண்டு, பத்திரிகை அறிக்கை மட்டும் விட்டுக்கொண்டிருந்து சாதிக்கவில்லை மக்களே!

எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்......

அவப் பெயர்கள் எத்தனை யெத்தனை......

துரோகிகள் என்றார்கள்,

முகமூடிகள் என்றார்கள்,

காட்டிக் கொடுப்பவர்கள் என்றார்கள்,

இந்தியாவின் கையாட்கள்,

இந்தியாக்காரனின் 'டால்டா' எண்ணெயிலும் டால் (பருப்புக்) கறியிலும் வாழுபவர்கள் என்றார்கள்...

இவ்வாறு வெறுமனே பட்டப் பெயர்கள் மட்டும் சூட்டப்படவில்லை மக்களே!

அனைத்துப் பக்கத் தூற்றுதல்களினாலும் நாம் சோதனைக்கும் வேதனைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்த அந்த வேளைகளில்—

எங்கள் தோழர்களின் நெருங்கிய இரத்த உறவினர்கள் தவிர—அதிலும் கூடப் பலரில்லை — ஏனையவர்கள் எம்மைப் பார்த்து வெறுப்புடனோ அல்லது புலிகளுக்கு அஞ்சியோ சிரிப்பதுகூட இல்லை.

இந்தியப் படைகளின் ஒவ்வொரு சிறிய தவறுகளுக்கும் எங்களையும் பொறுப்பாளிகளாக்கிப் பிரச்சாரம் நடந்தது.

புலிகளும் ஏனைய சமூகவிரோதிகளும் மேற்கொண்ட கொள்ளைகள் எல்லாம் எங்களோடு இணைத்துக் கதை கட்டப்பட்டது.

பகலிலே இந்தியப் படையினரோடு திரிவது, இரவிலே முகமூடி அணிந்து கொள்ளையடித்துத் திரிவதாக எங்கள் மீது கதைகள் மிகப் பரந்த அளவில் கட்டிவிடப்பட்டன.

## ப்ரசமிகு மக்களே!

இவை எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டுதான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் உழைத்தார்கள் என்பதை நீங்கள் எந்தக் காலத்திலும் மறந்துவிடமாட்டீர்கள்;

வரலாறு மறந்துவிடாது என்று உறுதியாக நம்புகிறோம்.

எங்கள் கையில் மாகாண அரசாங்க அதிகாரம் விழுந்துவிட்டது. ஆகவே எமது வேலை முடிந்துவிட்டது என்றும் நாங்கள் இருந்துவிடமாட்டோம்.

எங்கள் சமுதாயத்தில் சமாதானமும் ஜனநாயகமும் பூரணமாக நிலவுகின்றவரை—

நாங்கள் போராடிக் கொண்டுதான் இருப்போம்;

எங்கள் தேசம் மீண்டும் வளங் கொழிக்கும் பிரதேசமாகக் கட்டியெழுப்பப் படுகின்றவரை—

நாம் விடாப்பிடியாக உழைத்துக் கொண்டுதான் இருப்போம்.

நம்மைப் பார்த்து ஏளனம் செய்பவர்கள்,

எங்கள் மீது சேற்றை வாரியிறைப்பவர்கள்,

எங்கள் நெஞ்சார்ந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு எமது செயல்களுக்கு விளக்கம் பெற முற்படாமல் நம்மைக் கேவலமாய் இழிவுபடுத்துபவர்கள்......


இவர்களால்எல்லாம் பாதிப்புற்று எமது பணிகளிலிருந்து பின்வாங்கிவிடும் தவறை நாம் ஒருபோதும் செய்ய மாட்டோம்.

எங்கள் மீது என்ன பட்டம் சூட்டப்படுகின்றது என்பதைப் பற்றி எமக்கு கவலையில்லை.

மக்களுக்கும் எமது தேசத்திற்கும் நாம் எவற்றை ஆக்கிக் கொடுக்கிறோம் என்பதுதான் எமக்குப் பிரதானம்.

எமது மக்களாகிய நீங்கள் சரியான முழுமையான தீர்ப்பை அவ்வப்போது வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையை—

( - தொடர்ச்சி 8 ம் பக்கம்......)



தோழர் கொல்வினின் மறைவுக்கு அஞ்சலியையும், அன்னாரின் குடும்பத்தினருக்கும், இடதுசாரி நண்பர்களுக்கும எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(...... 3 ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னிடமிருந்த மிகச் சிறந்த வில்லையும் கூர்மையான அம்புகளையும் எடுத்துக் கொண்டு தன் மைந்தனை அழைத்து —

''நீ தைரியசாலிதானா?'' என்று கேட்டான்.

''தைரியசாலிதான்'' என்று சிறுவன் பதிலளித்தான்.

''மக்கள்பால் நீ பாசமும் பரிவும் கொண்டிருக்கிறாயா?''

''கொண்டிருக்கிறேன்!''

''அப்படியானால் என்னுடன் புறப்பட்டு வா! நாம் செல்லவேண்டிய இடம் தொலைவில் இருக்கிறது, நமது பணி பயங்கரமானது, ஆனால் நாம் இதைச் செய்தே ஆகவேண்டும். நீ என்னைக் கேட்க விரும்புவது ஏதாவது உண்டா?''

இல்லையென்று சிறுவன் தலையை ஆட்டினான். வேடனும் அவன் மகனும் மௌனமாய் நடந்தனர். அல்மீசின் உறைவிடம் என்று எல்லோரும் அறிந்த மலைகளை நோக்கி இருவரும் சென்றார்கள்.

ஒற்றையடிப் பாதைகூட இல்லாத அடர்த்தியான காட்டைக் கடந்தும் பாறைச் சரிவுகளில் ஏறியும் தொடர்ந்து நடந்து திறந்தவெளி ஒன்றை வந்தடைந்தார்கள்.

பட்டுப்போன மரத்தின் அடிப்பகுதி அங்கே நின்றது. அதைச்சுற்றிலும் புதர்களும் மரங்களும் வளர்ந்திருந்தன. வனவிலங்கோ பறவையோ எதுவும் அங்கே தென்படவில்லை.

பரல்தோய்—மெர்கேன் தனது வேட்டை உடுப்புக்களைக் கழற்றி இந்த அடிமரத்திற்கு அணிவித்து அதை ஒரு வேடனைப்போல் தோன்றச் செய்தான். சிறுவன் பேசாமல் பார்த்துக் கொண்டு நின்றான், தந்தையை அவன் கேள்வி எதுவும் கேட்கவில்லை. வேடன் அந்த அடிமரத்திற்கு அருகே கொள்ளிகளைப் போட்டுத் தீ மூட்டினான். அப்பொழுதும் சிறுவன் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு வேடன் தன் மகனிடம்—

''இங்கே தீயின் அருகே நீ உட்கார்ந்திரு, என்ன நேர்ந்தாலும் இங்கிருந்து ஓடாமல் இருக்க வேண்டும்!'' என்று கூறினான்.

''ஓடாமல் இங்கேயே இருக்கிறேன்''

''இனி நடைபெறப் போவது உனக்குக் குலைநடுக்கம் உண்டாக்குவதாய் இருக்கும்''

''எதைக் கண்டும் நான் நடுங்க மாட்டேன்''

''நல்லது, இங்கே உட்கார்ந்திரு''

சிறுவன் தீயின் அருகே அமர்ந்துகொண்டான், வேடன் தன் வில்லை எடுத்துக் கொண்டு புதர்களிடையே ஒளிந்துகொண்டான். இவர்கள் இருவரையும் தவிர அங்கே யாரும் இல்லை. எங்கும் நிசப்தமாயிருந்தது.

இப்படி அவர்கள் நெடுநேரம் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பிறகு திடுமென கிளைகள் சலசலத்தன, குச்சிகள் முறிந்தன. மரங்களுக்கு இடையிலிருந்து அல்மீஸ் பூதம் அந்த திறந்த வெளியினுள் நுழைந்தது. அதனுடைய கரிய வீசைகள் அதன் தோள்களில் கிடந்தன, கண்கள் இரத்தச் சிவப்பாய் இருந்தன, கூர்மையான பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு நடந்து வந்தது. தீயிற்கு அருகே அமர்ந்திருந்த சிறுவனைக் கண்டதும் அது ஆனந்தக் கூச்சலிட்டது,

''மனித ஊனத்தைத் தேடி நான் கிராமத்திற்கு புறப்பட்டேன், இதோ இங்கேயே எனக்காக அது காத்துக் கொண்டிருக்கிறது!'' என்று உறுமிற்று.

பிறகு அடிமரத்தைப் பார்த்ததும் பூதம் அதை வேடனாய் நினைத்துக் கொண்டு, வாய்விட்டுச் சிரித்தது.

''வேடனே, உன் மகனைப் பிடித்துத் தின்னப் போகிறேன்! அவனுக்காகப் போராட நீ துணியமாட்டாய்!'' என்று கூறியவாறு தீயை நோக்கி அது பாய்ந்தோடிற்று;

அதன் கண்கள் மின்னின; இரத்த தாகம் கொண்ட அதன் உறுமல் அதிரவைத்தது. அல்மீஸ் அச்சிறுவனைப் பிடிக்கப் போயிற்று. ஆனால் சிறுவன் எழுந்து அடிமரத்துக்குப் பின்னால் ஓடினான். அல்மீஸ் அவனைத் துரத்திக்கொண்டு ஓடிற்று. ஆனால் சிறுவன் சிறுவன் அடிமரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடவே, பூதம் அவனைப் பிடிக்க முடியாமல் துரத்திக்கொண்டு பின்னால் ஓடிற்று.

இப்பொழுது பரல்தோய் மெர்கேன் குறிபார்த்து அம்பை எய்தான். அல்மீசின் நெஞ்சு மையத்திலே அது பாய்ந்தது. வலிதாங்காமல் அல்மீஸ் ஊளையிட்டுக் கத்திற்று, அது கத்திய கத்தலில் மரங்கள் ஆடிக் குலுங்கின, பாறைகள் வெடித்து மலைகளிலிருந்து உருண்டோடின.

பரல்தோய்—மெர்கேன் குறிபார்த்து பூதத்தின் நெஞ்சிலே வரிசையாய் அம்புகளை எய்திச் சென்றான்.

அல்மீஸ் சீற்றமடைந்து, வேடனது உடுப்புகள் அணியப்பட்டிருந்த அடிமரத்தின் மேல் பாய்ந்து, நகங்களால் குத்திக் கிழித்தது, பற்களால் கடித்துக் குதறிற்று, ஆனால் திடுனெமச் சாய்ந்தது தரையிலே விழுந்தது. பரல்தோய்—மெர்கேன் அதன் அருகே ஓடி வந்து பார்த்தான், பூதம் மடிந்து விட்டது என்பது தெரிந்தது.

பூதத்தைக் கண்டதும் சிறுவன் பயந்து போனானா என்று பரல்தோய்—மெர்கேன் அவனைக் கேட்க வில்லை.

''வா, வீட்டுக்குப் போவோம்!'' என்பதைத் தவிர அவன் தன் மகனிடம் எதுவும் சொல்லவில்லை.

இருவரும் கிராமத்துக்குத் திரும்பி வந்தனர்.

பரல்தோய்—மெர்கேன் தனது கிராமத்தின் மக்களைப் பார்த்து—

''ஒவ்வொரு நாளும் கொலைகளையும் பயமுறுத்தலையுமே எதிர்பார்த்து வாழ்ந்து வந்த வாழ்க்கை முடிந்து விட்டது. இனி நீங்கள் சுதந்திரமாய்ப் பேசலாம்— எண்ணங்களை வெளியிடலாம். பயச் சூழ்நிலை நமது கிராமத்திலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டது. இனி நமது குழந்தைகள் அபாயமின்றி வளர முடியும், தாய்மார்கள் எல்லோரும் அச்சமின்றி வாழ முடியும்! அல்மீஸ் பூதம் ஒழிந்து விட்டது, கொல்லப்பட்டு விட்டது!'' என்று கூறினான்.

''அதைக் கொன்றது யார்?'' என்று எல்லோரும் அவனைக் கேட்டனர்.

''நான்தான்''

''உன்னுடைய சிறுவனையும் ஏன் உன்னுடன் அழைத்துச் சென்றாய்?''

''அல்மீசைக் கவர்ந்து இழுப்பதற்கான தூண்டில் இரையாய் வைப்பதற்காக அவனை அழைத்துச் சென்றேன்''

''அல்மீஸ் கையில் அகப்பட்டிருந்தால் சிறுவன் சின்னா பின்னமாய் போயிருப்பானே!''

''அகப்பட்டிருந்தால் அப்படித்தான் நேர்ந்திருக்கும்''

அதற்குமேல் பரல்தோய் மெர்கேன் ஒரு வார்த்தைபேசாமல் தன் வீட்டிற்குள் நுழைந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



# வட-கிழக்கு மாகாண அரசாங்கம்

மக்களோடு மக்களாக வாழ்ந்திருந்து,

சிறிலங்கா அரசின் மாற்றாந்தாய் மனப்போக்கினால் வெகுண்டெழுந்து எதிர்ப்புக்காட்டி,

தமிழ்பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச அடக்குமுறைக் கொடூரங்களால் அதற்கெதிராகப் போராளிகளாக மாறிய இளைஞர்களை—

இன்று புனர்நிர்மாணப் பணிகளால் மக்களுக்குப் புதுவாழ்வினை அளிக்கவும் அழிந்ததேசத்தைப் புதுப்பொலிவுடன் கட்டியெழுப்பவும்—

அதிகாரத்தைப் பயன்படுத்திச் சேவையாற்றுவதற்கென மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள்.

மாகாண அரசாங்க அமைப்பில் உள்ள அதிகாரங்களையும் வாய்ப்புக்களையும் எவ்வளவு தூரம் உச்சக்கட்டம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவையும் தவறாது பயன்படுத்தி எமது மக்களுக்குத் தேவைப்படுகின்ற அமைதி, ஜனநாயகம், ஒற்றுமை, புதியவாழ்வு, முன்னேற்றமான எதிர்காலம் என்பவற்றை நிலைநாட்டுவார்கள் என்ற மக்களின் நம்பிக்கை பொய்த்துப்போகாதவாறு இந்த மாகாண அரசாங்கம் செயற்படும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.



வட—கிழக்கு முதல்வர் திரு அ.வரதராஜப்பெருமாள்



நிதியமைச்சர் திரு பெ.கிருபாகரன்



சபைத் தலைவர்
திரு பொன்ராம் ராஜகாரியர்

வடக்கு கிழக்கு மாகாண முதல்வரையும், அமைச்சர்களையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்து உரையாற்றிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா அவர்கள்—

''மக்கள் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கம் உருவானதிலிருந்து நிறைய எதிர்பார்ப்புகளோடு உள்ளார்கள். நாம் தேர்தலுக்கு முன் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இந்த அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாம் உன்னிப்பாக கண்காணித்தும் வருவோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிப்பதோடு வடக்கு கிழக்கை பொருளாதார ரீதியாகவும் எமது நீண்டகால நலன்களுக்கு உகந்தவாறு மறுசீரமைத்துக் கொள்வதிலும் மாகாண அரசாங்கம் உரிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.

''ஜனநாயக சமுதாயம் ஒன்றினையும் சமதர்மத்தினை நோக்கிய சமூகவளர்ச்சிக்கான அடிப்படைக் கூறுகளையும் நிலைநாட்டுதலே அடிப்படைக் கொள்கையாகும்'' எனக் கூறும் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன அறிக்கை—

''அமைதி, ஜனநாயகம், ஒருமைப்பாடு, சமாதானம் ஆகியவற்றுக்காக உழைத்துப் பாடுபடுதல் மூலம் இக்குறிக்கோள் நிறைவேற்றப்படும். பாதிக்கப்பட்ட மக்களினது மறுவாழ்வு, பாதிப்புற்ற இடங்களினது மீள்சீரமைப்பு, வறுமை, வேலைத் திண்டாட்டம் ஆகியவற்றின் ஒழிப்புக், காணி அற்றோருக்கான காணி ஒதுக்கீடு, குடியிருப்பாளர் ஒவ்வொருவருக்குமான பாதுகாப்பினை அளித்தல் ஆகியவையே வட—கிழக்கு மாகாண அரசாங்கத்தின் இறுதி இலட்சியமாகும்— என விளக்குகிறது.

அழிந்த தேசத்தைப் புனரமைத்தல்—முன்னேற்றுதல் என்பதை முதன்மையானதாகக் கருதும் எவரும் இனி ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள், இந்த மாகாண அரசாங்க வடத்தைப் பிடித்திழுத்துச் செல்ல வந்து சேர்ந்துகொள்வார்கள், சுபிட்சத்தை மக்கள் தரிசிக்க வைப்பார்கள்; தேரையே உடைத்துவிட முற்படுபவர்களை மக்கள் கவனித்துக் கொள்வார்கள்.



காணி, புனர்வாழ்வு அமைச்சர்
திரு கனேசலிங்கம்



போக்குவரத்து, தொழிற்துறை அமைச்சர்
ஜனாப் அபூயூசுப்



தலைமைச் செயலர்
திரு வி.என்.சிவராசா



முதலமைச்சரின் செயலாளர்
கலாநிதி கே.விக்னேஸ்வரன்



புனர்வாழ்வமைச்சின் செயலாளர்
திரு என்.பத்மநாதன்



கல்வியமைச்சின் செயலாளர்
ஜனாப் எம்.எம்.மன்சூர்



விவசாய அமைச்சின் செயலாளர்
திரு எஸ்.சிவதாசன்

www.padippakam.com

புதியகண்ணோட்டம்

1989 பங்குனி 01

(......1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் ஈரோஸினர் அலறுவத நிருக் காரணங்கள் உண்டு. ஒன்று: அடிவிழுந்தாலும் என்று எதிர்பார்த்து தப்பிக் கொள்வதற்காக 'ஐயோ அடிக் கிறான் ஐயோ அடிக்கிறான்' என்று முன்கூட்டியே கத்துதல். இரண்டு; எல் லோரும் அடிக்கிறார்கள் என்று பெரிது பண்ணிக் காட்டுவதன் மூலம் புலிகளி டம் அன்பைச் சம்பாதித்துப் பாதுகாப் புப் பெறுதல்.

எது எப்படியோ ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணியின் தோழர் கள் அனைத்துவகை அவமானங்கள், நெருக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து உருவாக்கியிருக்கும் இந்த ஜனநாயகச் சூழலில், நல்லது செய்யும் நோக்கோடு வந்து இணைந்திருக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் எங்கள் வரவேற்பைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் ஈரோஸ் உறுப்பினர்களும், ரெலோ உறு ப்பினர்களும்—

மாகாண அரசாங்கத்தைப் பலப்ப டுத்தி, எமது மக்களுக்கு வளங்கொழிக் கும் வாழ்வை ஏற்படுத்தித்தர பாரா ளுமன்றத்தில் ஏமது மக்களின் குரலாக ஒலிப்பார்களென எதிர்பார்க்கலாம்.



ஈ.பி.ஆர்.எல்.எவ்
பாராளுமன்ற குழுவின் தலைவர்
தோழர் க.பிரேமச்சந்திரன்.

# உசாவலாயன்

என் வாழ்நாளில் கிட்டத்தட்ட
எனக்குப் பைத்தியம் பிடிக்கும்
போலிருந்த தருணங்களுக்குப்
பட்டியல் தாயாரிச்சால் (பட்டியலின்
நீளத்தில் வீணாய் அக்கறை
காட்டாதீர்கள்!) அதில் சென்ற
மாதச் சம்பவங்களின்
தருணங்களுக்குத்தான் முதலிடம்.

அமிர் அண்ணன் தோத்துப்
போவாரெண்டு நான் சத்தியமாய்
எதிர்பார்க்கேல்லை., எந்தப் பெரிய
அரசியல்வாதி அவர்! (இப்படித்தான்
நேற்றுவரை நினைச்சிருந்தனான்)
இஞ்ச பார்......சனம் புறங்கையாலை
தள்ளி விட்டிட்டுப் போய்க்
கொண்டிருக்கு. வாய் புளிச்சுதோ
மாங்காய் புளிச்சுதோ எண்டு பாவம்
அவர் விட்டுக் கொண்டிருக்கிற
அறிக்கையளைப் பார்க்கேக்கை
பரிதாபமாயிருந்தாலும்—
பின்கதவைத் திறந்துகொண்டு
'விட்டேனோ பார்' எண்டு
பாராளுமன்றத்துக்குள் நுழைஞ்சு
சனத்தின்ர தீர்ப்பை அவமதிச்சதில்
எனக்கு உடன்பாடில்லை.

இத்தனை நாள் அவரிலை மரியாதை
வைச்சிருந்தனான் எண்டதாலை
வருத்தம்தான்

எனக்குப் போட்டியாய் அமிர்
அணணன் விடுற ஏணிக்
கதையளையெல்லாம் கேட்டால்,
எப்பவோ நினைக்க நினைக்கச்
சிரிப்புதான் வருது' எண்ட
தலைப்பிலை எஸ்.எஸ்.ஸிச்
சோதினைக்கு நான் எழுதின
கட்டுரைப் பகிடியளெல்லாம்
ஞாபகத்துக்கு வருது...ம்!
என்னசெய்ய! ஒட்டுமொத்தமாய்
தமிழர் விடுதலைக் கூட்டணியையே
மக்கள் தூக்கியெறிஞ்சு போட்டினம்
எண்டதை விட, அமிர் அண்ணனை
மக்கள் வேண்டாம் எண்டு
தீர்ப்பளிச்சதுதான் 'சோகமானது
(எனக்கு!)' ஏனெண்டால், அமிர்
அண்ணன் மட்டக்களப்பில்
போட்டிக்கு இறங்கியதே
சுவாரசியமான ஒரு சாகசக்கதை:

ஈ.பி.ஆர்.எல்.எவ் பைத்
தோற்கடித்து விட்டு மாகாண
சபையைக் கைப்பற்றக் காத்துக்
கொண்டிருப்பதாய் (முன்னாள்)
கூட்டணித் தலைவர் சிவா
பத்திரிகையாளருக்குச் சொல்கிறார்,
அமிர் அண்ணன் மனதுக்குள்
இப்படி திட்டமிடுகிறார்:
ஈ.பி.ஆர்.எல்.எவ் க்கு வடக்கில்
செல்வாக்கில்லை. ஏதோ விதமாய்
ஈபி பற்றிக் கூடாத விதமான
கதைகள் பரவலாய் அடிபடத்
தொடங்கியாச்சு, கிழக்கிலதான்
ஈபி கொஞ்சம் செல்வாக்காய்
இருக்குப் போலத் தெரியுது.
எனவே (அமிர்) தான் மட்டக்களப்பில்
போட்டியிட்டால் அங்கும்
ஈ.பி.ஆர்.எல்.எவ் பைத் தோற்கப்
பண்ணி விடலாம்......பிறகென்ன
மாகாண முதல்வர்தான்
ஹஹ்ஹஹ்ஹா...! என்று சினிமா
வில்லன் பாணியில் அவர்
சிந்திச்சிருக்கிறார்.

அவ்வளவுதான், போனஸ் சீற்
வழியாகத் தன்னை தெரிவு செய்யச்
சொல்லிக் கேட்டிருந்த
ஒப்பந்தத்தை மீறி அமிர் அண்ணன்
சடாரென்று ஆருக்கும் சொல்லாமல்
மட்டக்களப்புப் பட்டியலில்
குதித்தார். ''சனமோ அமிர்
கூட்டணியே இனி வேண்டாம் எண்டு
கோபத்தோடை தீர்ப்பளிச்சிருக்கு.
இதுக்குப் பிறகு எப்படி நடந்து
கொள்ள வேணுமெண்டது அவரவர்
நாகரிக நடத்தைகளோடு
சம்பந்தப்பட்டதுதான்.

மாறுதலை விரும்புகின்ற சனத்தின்
முடிவை ஒப்புக்கொள்ளாமல் அமிர்
அண்ணன் கதிரைக் கனவுகளோடை
நாண்டு கொண்டு நிண்டது
அருவருப்பைத் தந்தாலும்,
மற்றவர்கள் கடைசியில் அமிர்
அண்ணனுக்கு விட்டுக் கொடுத்துப்
பிரச்சினையை முடித்துக் கொண்டது
ஆறுதலாயிருக்கிறது.

அடுத்து, அமைதிக்குப் பிறகு
தேர்தலா தேர்தலுக்குப் பிறகு
அமைதியா பட்டி மன்றப் புகழ்
ஈரோஸ்காரர்கள். தேர்தலும்
முடிஞ்சு குறிப்பிடக் கூடிய மாதிரி
வெற்றியும் பெற்றுவிட்ட பிறகு
பழசெல்லாத்தையும் மறந்துவிட
வேணுமெண்டதுதான் நியாயம்
அமைதி வந்தபிறகு தேர்தலுக்கு
வருவோம் எண்டவர்கள், இப்ப
எல்லாற்றை ஏச்சு பேச்சுக்களையும்
தாங்கிக் கொண்டு இந்த
நிலமையைக் கொண்டுவந்தவர்களை
நன்றியோடு நினைவு கூருவார்கள்
எண்டு நம்பலாம்.

இனி அவர்களுக்குப் பாராளுமன்றம்
போறதிலுள்ள பிரச்சினை.

தமிழ் பேசும் மக்களுக்கு எதையாவது
செய்யலாமே எண்டு நினைச்சுக்
கொண்டு பாராளுமன்ற பதவிகளுக்கு
ஆசைப்படும் உரிமையை புலிகள்
அவர்களுக்கு வழங்க மாட்டார்கள்.
ஏனெண்டால் தமிழ் மக்களுக்கு
ஏதாவது செய்யும் உரிமை
இருக்கிறதெண்டால் அது புலிகளுக்கு
மட்டும்தான் என்பது ஈரோஸ்
காரர்களும் பயபக்தியோடு ஒப்புக்
கொள்கிற விடயந்தானே!
ஆகவே, 'நாம் பதவிகளுக்காகத்
தேர்தலில் நிற்கவில்லை,
மக்களின் ஜனநாயக விருப்பத்
தைத்தான் வெளிப்படுத்தினோம்'
எண்டு 'சட்டிசுட்டதடா
கைவிட்டதடா' பாணியில்
அவர்களுக்கே, நாம் என்ன செய்யப்
போகிறோம் எண்டு தெரியாதபடிக்கு
அறிக்கைகளோடு கூனிக் குறுகிக்
கொள்வார்கள்.

எனக்குப் பிடிச்ச
ஈரோஸ்காரர்காரர்களின் தந்திரம்
இதுதான்; தப்புச் செய்யாமலிருக்க
வேணுமெண்டால் எதையுமே
செய்யாமலிருப்பது. மற்றவர்களின்
பிழைகளைப் பிழிஞ்செடுத்துப்
பிரச்சாரம் செய்துகொண்டிருந்தால்,
மற்றப்பக்கத்தில் இவர்கள் பிழை
விடமாட்டார்கள் எண்ட
நம்பிக்கையை உருவாக்குகிற
வித்தைதான். கெட்ட
பேரெல்லாத்தையும் தாங்கிக்
கொண்டு எதையோ சாதிக்க
நினைக்கிறவனைவிட, சும்மா இருந்து
நல்லபிள்ளைப் பேரெடுத்துக்
கொள்ளுறதும் கிடைச்ச பலனைப்
பங்கு போடப் புகுந்து கொள்ளுறதும்
ஈரோஸின் கெட்டித்தனம்தான்.

சரி, ஜனநாயகத்தையும்
சமாதானத்தையும் எப்பிடி
ஏற்படுத்தலாம் எண்ட
ஈ.பி.ஆர்.எல்.எவ். வின் வழிக்கு
நீங்களும் வந்திட்டதால் இனி
ரெண்டுபேரும் இரட்டைக் குழல்
துப்பாக்கியாய் பாராளுமன்றத்தில்
இருந்து கொண்டு மாகாண
அரசாங்கத்தைப் பலப்படுத்தி
மக்களுக்குத் தேவையானதுகளை
செய்யலாம்தானே? எண்டு ஈரோஸ்
காரர்களிடம் ஆராவது கேட்டால்,
இவ்வளவு தெளிவாய்க் கேள்விகள்
கேக்கிறதுக்காக வருத்தப்பட்டுக்
கொண்டு, உண்மையான
ஜனநாயகம், நிரந்தர சமாதானம்
எல்லாம் இன்னும் வரேல்லையே
எண்டு கழுவுற தண்ணியில் நழுவுற
மீனாகக் கூடும்.

'சரி, இதெல்லாத்தையும்
கொண்டுவரத்தான் தேர்தலில்
வாக்களியுங்கள், புலிகளைப்
பேச்சுக்கு அழைத்துவருகிறோம்;
புலிகளைப் பேச்சுவார்த்தைக்குக்
கூப்பிடக்கூடிய பக்கத்தில் நாங்கள்
தான் இருக்கிறோம்......
எண்டெல்லாம் சொன்னீங்களே......
எப்ப அழைத்துவரப் போகிறீர்கள்
எண்ட கேள்விகளுக்கெல்லாம்
பதிலளிக்காமல் ஈரோஸ்காரர்கள்
பாராளுமன்றத்துக்குள் போய்விட
மாட்டார்கள் எண்டு நம்புவதில்
நாங்கள் ஒண்டும் குறைஞ்சு போகப்
போறதில்லை.

அல்லது, ஆர்கண்டது...
நல்லவர்கள் (?) தான் மக்களை
ஆளவேணும் எண்டு சொல்லிக்
கொணடு பாராளுமன்றத்துக்குள்
போனாலும் போய்விடக்கூடும்......
ம்...தமிழ் மக்கள் எதனைத்தான்
தாங்கக் கூடிய மனநிலையில்
இல்லை.

(......6ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையுமான தெர்தல் முடி வுகளே எமக்குக் காட்டியிருக்கின்றன.

எனவே நப்பிக்கையோடும் உறு தியோடும் நாம் தொடர்ந்தும் உழைப்போம்.

புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டு ஊர்ப்பக்கம் தலை காட்டமுடியாமல் இருந்தவர்களை யும்,

புலிகளின் வாலைப் பிடித்து, அதன் தயவில் அடங்கி ஒடுங்கி சுய மாய் எந்த அபிப்பிராயமும் சொல்லி விடமுடியாமல் வாழ்ந்து வந்தவர்க ளையும்—

அரசியலில் தனித்துவத்தோடு பங்குபற்றுவதற்கு வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுத்திருக்கிறார்களே என்று கொஞ்சம்கூட நேர்மையுணர்வு இல்லாமல்—

ஈ.பி.ஆர்.எல்.எவ். பை எப்படி நெருக்கடியில் மாட்டிவிடலாம்,

மாகாணசபையில் இருந்து அத னை எப்படிக் கலைத்துத் தொலைத் து விடலாம் என்று நினைத்துச் செயற்பட்டவர்களுக்கு—

மக்களே! நீங்கள் புகட்டியிருக்கும் பாடத்தை நெகிழ்ச்சியோடு நாங்கள் நெஞ்சில் பதிக்கிறோம்.

அதுவே எமக்கு மேலும் பலத் தை ஊட்டியிருக்கிறது —நம்பிக்கை யோடு எதிர்காலத்தை நோக்கி முன் னேறுவதற்கு.

(தொடர்ச்சி முன்பக்கத்தில்......)

**எங்கள் சமுதாயத்தில் சமாதானமும் ஜனநாயகமும் பூரணமாக நிலவுகின்றவரை நாங்கள் போராடிக்கொண்டுதான் இருப்போம்.**

**எங்கள் தேசம் மீண்டும் வளங் கொழிக்கும் பிரதேசமாகக் கட்டி எழுப்பப்படுகின்றவரை நாம் விடாப் பிடியாக உழைத்துக் கொண்டுதான் இருப்போம்.**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்காக கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பி.இராமலிங்கம் அவர்களினால் 01.03.1989 அன்று தெகிவளை A to Z அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

படிப்பகம்